18 MTA11 C - subject code

# முதுகலை முதலாம் ஆண்டு - தமிழ்

## இக்கால இலக்கியம்

அலகு: 4 நாடகம்

1. சிந்துபாத்தின் மனைவி - எஸ். ராமகிருஷ்ணன்
2. ஔவை - இன்குலாப்
3. மீள முடியுமா - ழான்போல் சார்த்தர்
   க்ரியா வெளியீடு.

தயாரிப்பு : முனைவர். வை. செல்வசுப்பிரமணியன்.
உதவிப் பேராசிரியர்
cell: 9952621715.

அலகு: 4 ஔவை நாடகம் - இன்குலாப்

இன்குலாப்

இயற்பெயர்: செ. கா. சீ. சாகுல் அமீது

கீழக்கரை என்னும் ஊரில் பிறந்தவர்

படைப்புகள்

இளவேனில் என்பவர் நடத்திய கார்க்கி இதழில் கவிஞர் இன்குலாப்பின் தொடக்கக் கால கவிதைகள் வெளிவந்தன.

தராசு, நக்கீரன், இனி, நாற்காலி, உண்மை உங்கள் ரசிப்பர் எனப் பல இதழ்களில் ஏராளமான கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியவர்.

மனுசங்கடா, நாங்க மனுசங்கடா என்னும் இவர் எழுதிய பாட்டு எண்ணற்ற மேடைகளில் ஒலித்து மக்களால் பாடப்படுகிறது.

கவிதைத் தொகுதிகள்:

1. இன்குலாப் கவிதைகள் (1972)
2. வெள்ளை இருட்டு (1977)
3. சூரியனைச் சுமப்பவர்கள் (1981 டிசம்பர்)
4. கிழக்கும் பின் தொடரும் (1985 பிப்ரவரி)
5. சுவக்குரல்
6. இன்குலாப் கவிதைகள் - தொகுதி இரண்டு
7. ஒவ்வொரு புல்லையும் (மேற்குறிப்பிட்ட தொகுப்புகளும் புதிய கவிதைகளும் அடங்கியது 1999)
8. ஒவ்வொரு புல்லையும் - இரண்டாம் பதிப்பு (1972 முதல் 2004 வரை எழுதிய கவிதைகளின் தொகுதி - 2004)

9. பொன்னிக் குருவி (2007 நவம்பர்)

10 புலிநகச் சுவடுகள்

11 காந்தள் நாட்கள் (2016) – 2017 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல்

12. ஒவ்வொரு புல்லையும் பெயர்சொல்லி அழைப்பேன் (2017 டிசம்பர் 1 - அனைத்துக் கவிதைகளும் அடங்கியது.

சிறுகதைத் தொகுதி

1 பாலையில் ஒரு சுனை.

கட்டுரைத் தொகுதிகள்

1. யுகாக்கினி
2. ஆனாஸ்

நாடக நூல்கள்

1. ஔவை
2. மணிமேகலை
3. குரல்கள்
4. தூது
5. மீட்சி
6. இன்குலாப் நாடகங்கள் (அனைத்து நாடகங்களும் அடங்கியது)

விருதுகள்

கவிஞர் வைரமுத்து விருது

"காந்தள் நாட்கள்" என்னும் கவிதைத் தொகுதிக்காக 2017 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருது மரணத்திற்குப் பின்னர் வழங்கப்பட்டது.

# ஔவை நாடகம் - இன்குலாப்

ஔவையைப் பற்றித் தமிழ்ச் சிந்தனையில் திணிக்கப்பட்ட பிரமையை உடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இன்குலாப் ஔவை நாடகத்தை எழுதுகிறார்.

ஔவை என்ற பெண்கவி மரபு பல்வேறு காலங்களில் தொடர்ந்திருப்பதை ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். இந்த ஔவைகள் தத்தம் காலங்களில் ஆற்றல் வாய்ந்த கவிதைப் படைப்புகளை விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பது உண்மை. எனினும் இந்த மரபைத் தொடங்கியவள் சங்க கால ஔவைதான். சங்க கால ஔவை என்று குறிப்பிடப்படுவது கூட ஒரு மரபு கருதித்தான். ஏனெனில் எட்டுத் தொகைகளில் பயிலும் ஔவையின் பாடல்களில் அவள் சங்கம் சார்ந்திருந்தாள் என்பதற்கு ஆதாரம் இல்லை. பிற்காலத்தில் இருந்த இருந்ததாகச் சொல்லப்பட்ட ஔவையார்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே சங்க கால ஔவை என்ற தொடரைக் கையாண்டார். அந்த ஔவை பிற்காலத்து வந்த எந்த ஓர் ஔவையின் சாயலுடனும் பொருந்தாதவள். அந்தக் காலத்தின் பெண்குரல் அவளுடையதுதான். அந்தக் காலத்தில் அவள் அறம் போதிக்கவில்லை. ஆடவரைச் சார்ந்து பெண் ஒழுக வேண்டும் என்ற அடிமைத்தனத்தை முன்மொழியவில்லை. காதலை உரக்கப் பாடியவள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவற்றில் அவள் படைப்பு இல்லை. புறப்பாடல்களிலும் அவளது வீரச்சொற்களில் வீரம் கொப்பளிக்கின்றது.

ஒரே ஒரு பாடலில் மட்டும் மூவேந்தர் ஒருங்கிருந்த நிலையைப் பாடிய ஔவை, அதியமான் நெடுமான் அஞ்சியையும் அவன் மகன் பொகுட்டெழினியையும் பற்றிப் பாடல்களில் பாடியுள்ளாள். நாஞ்சில் வள்ளுவன் என்ற குறுநிலத் தலைவனுக்கும் ஒரு பாடலை இசைத்துள்ளாள். எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே என்று பாடியதில் அவள் அறம்பற்றிச் சிந்தித்தாள் என்று கொள்வதற்கு இடம் உண்டு.

சங்கப் பாடல்களில் ஔவையால் குறிக்கப்படும் பெண் கவிஞர் வெள்ளி வீதி. வெள்ளிவீதியை ஒரு பாத்திரமாக்க வேண்டும் என்று நினைத்தார் நாடக வரைவின் கட்டுக் கோப்பினுள் வரமுடியா -ததாகத் தோன்றியதால், வெள்ளி வீதியின் பாத்திரப் படைப்பைத் தவிர்த்ததாகக் கூறி காதலனைத் தேடி வெள்ளிவீதி பாடிய பாடலை எயினி ஒருத்தி கேட்டுப் பாடுவதாக இணைத்த -தாக இன்குலாப் குறிப்பிட்டு ஔவையின் மனநிலைக்கு ஒத்ததாகவே வெள்ளி வீதியின் மனநிலையும் காணப்படுகிறது.

பல பாடல்களில் நாடகம் இருக்கிறது. ஆனால் வாழ்க்கை சார்ந்ததாக; புனைக் கற்பனை சாராததாக. சங்க இலக்கியத்தின் வழியாக வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்தைக் காட்ட முயல்வதும் இந்நாடகத்தின் நோக்கம்.

ஔவையின் மீது சுமத்தப்பட்ட முதுமையைக் களைவதில் தொடங்கி, ஒருங்கமைந்த ஒரு பெண் குரலைக் கேட்கச் செய்வது வரை இந்நாடகம் காட்சிப்படுத்துகிறது. முதுமை இயல்பானது, அழகானது ஆனால் இங்கே முதுமை என்பது ஆடவர் தருமத்தின் பாடப்பதிவாகப் பார்க்கப் படுவதால் அந்த முதுமை களையப்படுகிறது.

சங்க கால ஔவை, அதியமான் என்னும் மன்னனுடன் தோழமை கொண்டவளாக வருகிறாள். "ஔவையார்" படத்தில் வரும் ஔவைப் பாட்டியை விட இந்த ஔவை மிகவும் இளமையானவள். பேரழகும், பேரறிவும் மிக்கவள். கள் குடித்து, கறி சாப்பிட்டு அதியமானோடு நெருங்கிய தோழமை பாராட்டிய ஔவை அவள். கவிஞர் இன்குலாப் இப்படிப்பட்ட ஔவையைத்தான் தனது நாடகத்தில் சித்தரித்துள்ளார்.

எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய
சிந்துபாத்தின் மனைவி.

இந்நூலில் மூன்று நாடகங்கள் உள்ளன. விவரம் தெரிந்த நாள் முதல் 'தினத்தந்தி' பத்திரிகையில் வரும் சிந்துபாத்தை வாசித்து வருகிறேன். ஜோர்ஜ் லூயி போர்ஹே, அராபிய இரவுகள் குறித்த கட்டுரை ஒன்றில் இரண்டு சிந்துபாத்துக்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும் நிகழ்வு பற்றிக் குறிப்பிட்ட போதுதான் சிந்துபாத் என்ற கதாபாத்திரத்தின் பின்புனைவு பற்றிய சாத்தியங்களை யோசிக்க ஆரம்பித்தேன்.

சிந்துபாத் கடற்பயணம் மேற்கொள்ளும் போது, அவன் மனைவி வீட்டில் என்ன செய்து கொண்டிருப்பாள் என்ற பொறிதான் இந்த நாடகம். பணம் சேர்ப்பதற்காக வெளிநாடு செல்பவர்கள் அனைவரும் சிந்துபாத்துகளே. உலகைப் பற்றிக் கற்பனை செய்து கொண்டு, தனது அறிவாற்றல் ஒடுங்க வீட்டில் முடங்கிக் கிடக்கும் பெண்கள் அனைவரும் சிந்துபாத்தின் மனைவிகளே. இந்த இரு முனைகளுக்குள் இன்றைய நவீன வாழ்க்கையை

அதன் அபத்தங்களை, சவால்களை இந்த நாடகம் முன்வைக்கிறது.

சவரக் குறிப்புகள் நாடகத்தினுள் நாடகம் என்ற லூயி பிராண்டலோவின் வகையைச் சார்ந்தது. 'பொய் விசாரணை' அறிவியல் அறிஞர் புருனோவின் விசாரணையை முன்வைத்து அறிவியலின் வரலாற்றை ஆராய்கிறது. இந்த மூன்று நாடகங்களும் வெவ்வேறு தளங்களில் மாறும் வாழ்வின் நெருக்கடிகளைப் பேசுகின்றன. அவற்றின் ஊடாக மதமும் அதிகாரமும் எப்படி தனது ஒடுக்குமுறையை செயல்படுத்துகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

கதை மாந்தர்கள்: சிந்துபாத்தின் மனைவி!

சிந்துபாத்

சிந்துபாத்தின் மனைவி.

மாந்திரவாதி மீசா

காதலி லைலா.

பொய் விசாரணை: கதை மாந்தர்கள்.

புருனோ

கார்டினல் பெல்லார்மின்

கதை சொல்பவன்

போப் ஆண்டவர்

பாப்பி ரோசியோ.

சவரக் குறிப்புகள்: கதை மாந்தர்கள்

ஜான், வாசகர், நாயர், மாது, காவலர், மேலதிகாரி, வாசகர், அதிகாரி கிட்டார்காரன்.

எஸ். ராமகிருஷ்ணன்

சாகித்ய அகாதமி விருது

சஞ்சாரம் என்ற நாவலை எழுதியமைக்காக 2018 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது.

நாவல்கள்

உபபாண்டவம் (2000) நெடுங்குருதி (2003)
உறுபசி (2005) யாமம் (2007) துயில் (2010)
நிமித்தம் (2013) சஞ்சாரம் (2014)
சாகித்திய அகாதமி விருது பெற்ற நாவல்
இடக்கை (2016) பதின் (2017)
ஒரு சிறிய விடுமுறைக்கால காதல் கதை (2018)

சிறுகதைத் தொகுப்புகள்:

பால்ய நதி (2003) மழைமான் (2012)
நகுலன் வீட்டில் யாருமில்லை (2009)
தாவரங்களின் உரையாடல் (2007)

கட்டுரைத் தொகுப்புகள்:

இலைகளை வியக்கும் மரம் (2007)
நம் காலத்து நாவல்கள் (2008)
வாசகபர்வம் (2009)
என்றும் சுஜாதா (2011)
ஆயிரம் வண்ணங்கள் (2016)
இலக்கற்ற பயணி (2013)

வரலாறு:

எனது இந்தியா
மறைக்கப்பட்ட இந்தியா

நாடகத் தொகுப்புகள்:

அரவான் (2006)

சிந்துபாத்தின் மனைவி (2013)

சூரியனை சுற்றும் பூமி (2013)

உலக இலக்கியப் பேருரைகள்:

ஹோமரின் இலியட் (2013)

ஷேக்ஸ்பியரின் மெக்பெத் (2013)

தஸ்தாயெவ்ஸ்கியின் குற்றமும் தண்டனையும் (2013)

பாஷோவின் ஜென் கவிதைகள் (2013)

மொழிபெயர்ப்புகள்:

நம்பிக்கையின் பரிமாணங்கள் (1994)

ஆலிஸின் அற்புத உலகம் (1993)

பயணப்படாத பாதைகள் (2003)

பணியாற்றிய திரைப்படங்கள்:

சண்டைக்கோழி
பாகுபலி
ஆரம்பம்
பாபா
கன்ன மோட்சம்
திக்கு புக்கு
யுவன் யுவதி

Nothing but Whirling swirling sky → ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ள நூல்கள்

நேர்காணல் தொகுப்புகள்

எப்போதுமிருக்கும் கதை

பேசிக்கடந்த தூரம்

மீளமுடியுமா

ழான் போல் சார்த்ர்

1905 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 21 ஆம் தேதி பாரிஸ் நகரத்தில் பிறந்தார்.

1929 முதல் பிரான்சில் பல இடங்களில் தத்துவப் பேராசிரியராக இருந்த இவர் 1939 இல் உலகப் போரில் ஈடுபட்டு 1940 இல் போர்க் கைதியாகப் பிடிபட்டார். 1941 இன் முடிவில் ஒரு சாதாரணக் குடிமகன் போல நடித்துத் தப்பி விட்டார். அந்தக் காலகட்டத்தில் தான் 'சுதந்திரத்தின் பாதைகள்' என்ற மூன்று நாவல்கள் வரிசையின் முதல் நாவலையும் அவருடைய மகத்தான படைப்பான 'இருத்தலும் ஒன்றுமில்லாமையும்' என்ற தத்துவக் கட்டுரையையும் எழுதி முடித்தார்.

1943 இல் 'ஈக்கள்' என்ற அவருடைய முதல் நாடகம் வெளியானது.

இதன் பின்னால் 'மீள முடியுமா?' (No Exit), 'அழுக்கான கைகள் (Dirty Hands 'சாத்தானும் கடவுளும்' (Devil and the Good Lord) போன்ற பல நாடகங்களை எழுதினார்

பாத்திரங்கள் :

பணியாளன், கார்சன், இனேஸ், எஸ்தெல் சி. பிளோரான்ஸ், ரேமகர்,

மற்றவர்களாலும் போலி மனசாட்சியாலும் தங்களுடைய சுதந்திரம் பாதிக்கப்பட்ட நிலையில் மனிதர்களின் இருத்தல் எந்த அளவுக்கு அர்த்தமற்றுப் போய்விடுகிறது என்பதைச் சித்தரிக்கும் சார்த்ரின் இந்த நாடகம், மனிதனின் நிலையில் காணப்படும்

அவலத்தைக் காட்டும் ஒரு துன்பியல்
நாடகமாகப் படைக்கப்பட்டிருக்கிறது.
ஆங்காங்கே மிளிரும் ஒருவிதக் குரூரமான
நகைச் சுவையுடனும் அபார மனத் தெளிவுடனும்
சார்த்ர் மனசாட்சியைத் தட்டி எழுப்புகிறார்.

என்னுடைய 'இருத்தல்' முக்கியத்துவம்
பெற எனக்கு 'மற்றவர்கள்' அவசியம்
ஆகிறார்கள். சார்த்ர் சொல்வதுபடி
பார்த்தால் நமது வாழ்க்கை, மற்றவர்களுக்கு
நம்மைக் காட்டும் ஒரு 'பாசாங்காக'
இருக்கிறது. இது ஒரு மேலோட்டமான
ஐயம் கூட இல்லையென்கிறார் அவர்.

இதுவே, 'உண்மை நிலை' போன்று
தோன்றுகிறது. நமக்குப் புறத்தே இருந்து
அளிக்கப்படும் இந்த 'உண்மைநிலை'
க்குப் புறம்பாக நாம் இல்லை
என்ற ஆறுதலை அளித்து சொந்த முயற்சி
எதுவும் மேற்கொள்ளுவதிலிருந்து நம்மை
விடுவித்து விடுகிறது. மேலும், மற்றவர்களால்
'பார்க்கப்படுவதில்', அதன் மூலமாக நாம்
'இன்னார்' என்று அவையோரும் தெரிந்து
கொள்வதில், ஒருவிதத் திருப்தி கலந்த
மகிழ்ச்சி இருக்கிறது. ஆகவே தான்
மற்றவர்கள் பார்வையில் நமக்கு முக்கியத்து
-வத்தைத் தேடுகிறோம். நமது மனசாட்சி
-யிடமிருந்து நமக்குக் கிடைக்கும்
அங்கீகாரத்தைவிட மேலோங்கிய முக்கியத்து
-வத்தைப் பெறுவது எளிதாகிறது.

இந்த நாடகத்தில் எஸ்தெல்
சொல்கிறாள் "என் படுக்கையறையில்

ஆறு பெரிய கண்ணாடிகள் இருந்தன. மற்றவர்கள் என்னைப் பார்ப்பது போல என்னை நான் பார்த்துக் கொண்டேன். அது என்னை களிப்புடன் இருக்கச் செய்தது''

'மற்றவர்களின் இருத்தல்' என்ற கருத்து நாடகத்தின் தொடக்கத்திலேயே, மூன்றாவது காட்சியில், அறிமுகப்படுத்தப்படுகிறது. இனேஸ் என்ற பாத்திரத்தின் வருகையுடன். அதுவரை போராட்டம் எதுவும் இருக்கவில்லை. தான் வந்து சேர்ந்திருக்கும் புதிய உலகத்தை (நரகத்தை) எதிர்கொள்ள கார்சென் தயாராகி -னான். பணியாளனின் விளக்கங்கள் போதுமானதாக இல்லாத நிலையில் 'சாவுக்குப் பின்' என்ற இந்த நிலையைப் புரிந்து கொள்ள அவன் முயல்கிறான். அமைதியாக, பக்குவமாக அவன் புரிந்து கொண்டும் இருப்பான். அவன் மட்டும் 'தனியாக' இருந்திருந்தால்.

ஆனால் இனேஸ் நுழைகிறாள். அமைதி குலைகிறது. அவள் கேள்விகள் கேட்கிறாள் என்பதினால் மட்டும் அல்ல அவள் அங்கு இருப்பதே சங்கடத்தை விளைவிக்கிறது.

பின்னர் வரும் எஸ்தெல் சிக்கல்களை விளைவிக்கிறாள். 'என் இருத்தல் உங்களுக்குச் சங்கடத்தை அளிக்கிறது' என்று இனேஸிடம் சொல்லும் கார்சென், தனிமையையே தான் விரும்புவதாகச் சொல்கிறான். 'நான் தனியாகவே இருக்க விரும்புகிறேன்' அவர்கள் இருவரும் ஒவ்வொருவரின் தேவைகளை மற்றவர் மதிப்பதாக வாக்களித்துக் கொள்கின்றனர். அதுவும் எஸ்தெல் நுழையும்வரை தான் காப்பாற்றப்படுகிறது. பின்னர் ஒரு

சுவாரஸ்யமான முக்கோணப் போராட்டம் ஆரம்பிக்கிறது.

கார்செனின் தியாகமும் சாத்தியமாகாமல் போகிறது. ஒவ்வொரு கணமும் மற்ற இருவரின் இருத்தல் குறுக்கிடுகிறது. அவன் அமைதி குலைகிறது. பாதுகாப்புக் கவசமாகத் தன்னைப் பற்றி அவன் கொண்டிருக்கும் போலிக் கருத்துக்கள் குலைக்கப்படுகின்றன.

எஸ்தெல் விஷயத்திலோ, மற்றவர்களிடம் பொய்சொல்லி, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள அவளால் முடியவில்லை. அவளுடைய மாயையான முகத்திரை விழும்வரை கார்செனும் இனெஸும் அவளைக் கேள்விகளால் தாக்குகின்றனர். தான் ஒரு சபலக்காரி, தன்னைத் தானே நேசிப்பவள் என்றெல்லாம் எஸ்தெல் முதலிலேயே ஒப்புக் கொண்ட போதிலும், அவள் முக்கியமாக மறைக்க விரும்பும் ஒரு உண்மையை அவள் கக்கும்வரை அவர்கள் விடுவதில்லை. தன் குழந்தையையே கொன்ற கொடியவள் அவள் என்ற உண்மை.

கார்செனைப் பொறுத்தவரை, அவனை இனெஸ் மட்டுமே கேள்விகளால் தாக்குகிறாள். எஸ்தெல் அவனை விசாரணை செய்வதில்லை. அவனைக் காதலித்து அவளுக்குத் திருப்தி அளிக்கக் கூடிய ஆணாக அவன் இருந்தாலே போதும் என்று விரும்புகிறாள். ஆனால் இனெஸ் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள முனைகிறாள். இந்தப் பத்திரிகையாளனை வெறுப்புடன், கடுமையாகத் தாக்குகிறாள்.

எஸ்தெலைப் பலவிதங்களிலும் ஆக்கிரமிக்க விழையும் இனெஸுக்கு கார்செனின் இருத்தல் இடைஞ்சலாக இருப்பதால், அவனைப் பழிவாங்குகிறாள். அவளுடைய விடா முயற்சியும்

இறுதியில் கார்செனிடம் அவள் அடையும் வெற்றியும் தான் இந்த நாடகத்தின் பிரதான போராட்டம். அதைச் சுற்றித் தான் இந்நாடகம் அமைக்கப்பட்-டிருக்கிறது.

பல சமாதானங்களினாலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரிந்த கார்சனே இறுதியில் துகிலுரிக்கப்பட்டு நிர்வாணமாகிறான். தன் மனைவியைக் கொடுமைப்படுத்துவதில் இன்பம் கண்ட அவன், பொது வாழ்விலும் சவால்களைச் சமாளிக்க முடியாமல், தான் எதற்காகப் போராடினானோ அந்தக் குறிக்கோளை விட்டு ஓடிப் போனவன். அவன் ஒரு கோழை: தான் தைரியசாலி என்று காட்டிக் கொள்ள விரும்பிய கோழை.

இந்த இருவருக்கும் ஏற்படும் தொல்லை இனேஸுக்கு ஏற்படுவதில்லை. அவளை யாரும் இது மாதிரிக் கேள்விகள் கேட்டு விசாரணை செய்வதில்லை. அதற்கு அவசியமும் ஏற்படுவ-தில்லை. ஏனெனில், மற்றவர்களைவிட தன்னைப் பற்றித் தெளிவாக இருக்கும் இனேஸ், தன்னுடைய நரகத்தைத் தானே உண்டாக்கிக் கொள்கிறாள். மற்றவர்களைத் துன்புறுத்துவதில் இன்பம் காண்பவள் என்றும், கொடியவள் என்றும் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கி-றாள். "நான் ஒரு தீக்கொழுந்து. நெஞ்சங்களில் ஒரு தீக்கொழுந்து. தனியாக இருக்கும் போது நானே அணைந்து போய்விடுகிறேன்!" ஆக மூவரும் துன்பம் இழைத்தவர்கள். மூவரிடமும் போலி மனசாட்சி செயல்படுகிறது. ஆகவே அவர்களுக்கு இந்தத் தண்டனை சரியென்று சொல்லலாமா?

இந்த நாடகத்தில் வரும் 'நரகம் என்பது மற்றவர்கள் தான்' என்ற சார்த்ரின்

சொன்னவர் மிகவும் பிரபலமாகி, இந்த நாடகத்தின் மையக் கருவாக விளங்குகிறது.

மற்றவர்கள் என்னை வேவு பார்த்து, பிம்பமாக வளர்ச்சிக்கு ஆளாக வேண்டிய எனக்கு உயிரற்ற ஒரு பொருளின் பிம்பத்தை அளித்து விடுகிறார்கள். என்பது ஒருபுறமிருக்க எனக்கு அவர்கள் தேவையாகவும் இருக்கிறார்கள் என்ற நிர்ப்பந்தமும் மறுபுறமிருக்கிறது. இந்த இரண்டாலே மற்றவர்கள் எனக்கு இழைக்கும் சித்ரவதை: நரகம்.

சார்த்தரின் தேர்ந்தெடுக்கும் பாத்திரங்கள் எவருமே கதாநாயகத்துவம் வாய்ந்தவர்கள் இல்லை. கார்சென், எஸ்தெல், இனெஸ் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு ஏன் நரகமாகி விடுகிறார்கள் என்றால், அவர்கள் இவரிடமே போலி மனசாட்சி செயல் தேவைப்படுவதால் தான்.

அவர்களிடையே காணப்படும் உறவுகளின் தன்மை, சாவதற்கு முன், பூமியில் அவர்கள் மற்றவர்களுடன் கொண்டிருந்த உறவுகளின் தன்மையின் பிரதிபலிப்பே ஆகும். அவர்களது எதிர்மறைக் குணம் அவர்களின் வாழ்க்கை முடிந்த பின்னும், அதாவது நரகத்தில் தொடர்வதில் வியப்பில்லை. அவர்களது போலி மனசாட்சி இன்னமும் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் அவர்கள் இருக்கும் இடம் நரகமாக ஆகி விடுகிறது.

பூமியில் இருக்கும் வரை தான் வீரனாகவே இருக்க விரும்பினேன் என்று கார்சென் சொல்லியும் அவன் கோழையாகவே வாழ்ந்திருக்கிறான் என்பதை இனெஸ் அம்பலப் படுத்துகிறாள். சாவிற்குப் பின், வாழ்க்கையை இனிமேல் மாற்றி அமைக்க முடியாது என்கிற

உண்மை விசுவரூபம் எடுத்து நிற்கிறது.

நாடகத்தின் அமைப்பில் யதார்த்தமும் கற்பனையும் அழகாக இணைந்திருப்பதைப் பார்க்கலாம். இறந்த பின்பு நரகத்திற்கு வருபவர்கள் இரண்டாம் பேரரசுக் காலத்துப் பாணியில் உள்ள வரவேற்பறையில் இருப்பது ஒரு புதுமையான கற்பனை. அவர்கள் ஆவியாய் இன்றும் உயிரோடிருப்பவர்களுடன் பேசுவது போல அமைந்துள்ள கட்டங்கள் இக்கற்பனையை விசித்திரமாக்குகின்றன.

நரகத்தில் சித்திரவதை செய்யும் ஆயுதங்கள் இல்லை. தணல் அடுப்பு இல்லை. உள்ளே நுழைந்ததும் இவை அங்கு இல்லாதது கண்டு கார்சென் வியக்கிறான். ஆனாலும் அவன் தான் இறுதியில் சொல்கிறான் 'தணல் அடுப்புக்குத் தேவையே இல்லை! நரகம் என்பது மற்றவர்கள் தான்' காகிதம் வெட்டும் கத்தியால் எஸ்டெல் இனேஸைக் குத்துவது முரண்பாட்டின் ஒரு உச்சக் கட்டம். 'நான் இறந்து போய் விட்டவள் என்று உனக்கு நன்றாகத் தெரியும்.' என்கிறாள் இனேஸ். கொடூரமான நகைச் சுவை. உண்மையின் கசப்பு.

'மற்றவர்கள்' என்ற வேலிக்குள் தான் 'போலி மனசாட்சியின் சுதந்திரத்தை' இழந்து, உரிமையுடன், 'பொறுப்பையும்' தவிர்த்து தான், 'இருத்தலுக்கு' அர்த்தம் அளித்திருக்கக் கூடிய தேர்வுகளைச் செய்யாத மொத்தத்தில் சார்த்தர் சொல்லும் பொருளில் செயல்படாத - கார்சென் நிலைக்கு ஒப்பாகிறான்.

நரகம் என்பது 'மற்றவர்கள் தான்' என்பது தான் இந்த நாடகத்தின் மையக் கருத்து. ஒருவன் என்னவாக ஆக விரும்பினான் என்பதை அவனுடைய செயல்கள் மட்டுமே முடிவு செய்யும் என்பதே அக்கருத்து.

இறுதியாக இந்நாடகத்தில் வரும் வெண்கலச்சிலை நாடகத்தின் மூன்று பாத்திரங்களும் தாங்கள் நிலையைத் தாங்கள் நிலையின் அவலத்தை புரிந்து கொண்டால் ஓரளவு தெளிவு பிறக்கும். கார்சனைப் பொறுத்தவரை (தன் நிலையைப் புரிந்து கொள்வதற்கு முதலிலிருந்து கடைசிவரை உண்மையாகவே முயற்சிப்பவன் அவன்தான் இந்தப் 'புரிதலுக்கும்' வெண்கலச் சிலைக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. நாடகத்தின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை அந்த வெண்கலச்சிலை சிம்னி மேசை மீது தான் இருக்கிறது. மிகவும் பருமனான அதை அவனால் தூக்க முடியவில்லை. இறுதிக் காட்சியில் சொல்கிறான்: 'ஆம், அந்தத் தருணம் வந்து விட்டது. வெண்கலச் சிலை இங்கு இருக்கிறது. அதைப் பற்றி நான் யோசித்துப் பார்க்கிறேன். நரகத்தில் நான் இருக்கிறேன் என்பது எனக்குப் புரிகிறது. ஏன்? அவனும் ஒரு சிலை போல் ஆகிவிட்டான். உயிரற்ற, உணர்வற்ற அசைவற்ற ஒரு ஜடப்பொருள் (object) மற்றவர்களால் பார்க்கப்படும் 'பொருள்' ஒரு மனிதன் (உயர்திணை) ஒரு பொருளாக (அஃறிணை) ஆக முடியாது' என்றாலும், அவனை அப்படி ஆக்கிவிட அந்த நிலைக்குக் கொண்டுவர, மற்றவர்கள் முயல்கிறார்கள். இதைத்தான் அந்தச் சிலை உணர்த்துகிறது. இனேஸ், எஸ்தெல் இருவருக்கும் அவன் ஒரு 'பொருள்'; அவர்களின் வக்கிரங்களை ஆசைகளைப் பூர்த்தி செய்யும் 'பொருள்' இவர்களை மீறி தன்னைத்தானே அறிந்து கொள்ள அவனால் முடியவில்லை.

விளக்கை அணைத்து இருட்டில் ஒளிந்து கொள்ள முடியாது. இமைகளை மூடி மற்றவர்களை அழித்துவிட முடியாது.

கண்ணாடியின் மீது தன் உருவத்தை வீசி அது பிரதிபலிக்கும் மாயையில் மகிழ்ந்து கொண்டிருக்க முடியாது. இப்போது தான் அவனுக்குத் தன் நிலை, தன் குற்றம், தன் தண்டனை என்னவென்று புரிகிறது. 'மற்றவர்கள்' என்ற வேலிக்குள் தன் 'சுதந்திரத்தை' இழந்து, 'போலி மனசாட்சி'-யின் உதவியுடன் 'பொறுப்பையும்' தவிர்த்துத் தன் 'இருத்தலுக்கு' அர்த்தம் அளித்திருக்கக்கூடிய தேர்வுகளைச் செய்யாது – மொத்தத்தில் சார்த்தர் சொல்லும் பொருளில் செயல்படாது – கார்சென் சிறைக்கு ஒப்பாகிறான்.

மேலும் இந்நாடகத்தின் பல முக்கியமான குறியீடுகள், இதன் உட்பொருளான சார்த்தரின் இருத்தலியல் வாதத்தின் சில கோட்பாடுகளைப் பல கோணங்களிலிருந்தும் சித்தரிக்கின்றன. நரகத்தின் இந்த அறையில் விளக்குகள் எரிந்து கொண்டே இருக்கும். அணைக்க முடியாது. அதற்குத் தேவையான ஸ்விட்ச் அங்கு இல்லை. மேலும், இங்கு யாரும் கண்களைச் சிமிட்டக் கூட முடியாது. ஆக, 'கண்களை இமைக்காமலே வாழ வேண்டுமா?' என்றுக் கூடக் கேட்கிறான் கார்சென்.

இந்த அறையில் முகம் பார்க்கும் கண்ணாடிகள் கிடையாது. கண்ணாடி இல்லாததால், மற்றவர்கள் மூலமாகத் தான் தன்னை ஒருவர் பார்த்துக் கொள்ள முடியும். நம்மைப் புகழ்ந்து, நமக்கு மகிழ்ச்சியூட்டும் உருவத்தைப் பிரதிபலிக்கக் கண்ணாடி இல்லாததால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள முடியாது. அதையும் மீறி, நம்மைப் பற்றி நமக்கிருக்கும் சில மாயைகளைத் தகர்க்க மற்றவர்கள் இருக்கிறார்கள்.

ஆக இங்கு இல்லாத சில சாதனங்கள் - விளக்கின் ஸ்விட்ச், முகம் பார்க்கும் கண்ணாடி நரகத்தில் இருப்பதாகக் கருதப்படும் சித்ரவதைச் சாதனங்களைவிடக் கொடுமை -யானவையாகிவிடுகின்றன. அதாவது, தப்பிக்க உதவும் சாதனங்களை சார்த்ர் இல்லாமல் ஆக்கி விடுகிறார். சுதந்திரங் -களையே தேடும் மனித குலத்திற்கு 'உண்மையுடன்' இது ஒரு நேரடி மோதல்

1944 இல் சார்த்ர் இந்த நாடகத்தை எழுதினார். வாழ்க்கைக்கு அர்த்தத்தைத் தேட விழையும் தனி மனிதனுக்கு ஏற்படும் இருத்தலியல் ரீதியான மனப் போராட்டங்களை இந்த நாடகம் அலசுகிறது என்றாலும் அப்போது இருந்த அரசியல் சூழ்நிலையில் இதற்கு வேறு சில பரிமாணங்களும் கிடைத்தன. சுதந்திர, பொறுப்பு, போலி மனசாட்சி போன்ற கருத்துக்களுக்கு, போரின் அனுபவங்கள், தோல்வி அந்நிய ஆதிக்கம், இறுதியில் வெற்றி என்ற பல தளங்களிலிருந்தும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. சில அரசியல் சூழ்நிலைகளில் இதற்குத் தடை விதிக்கப்பட்டுக்கூட இருந்தது. 1944 முதல் இன்று வரை, சார்த்ரின் நாடகங் -களிலே மிக அதிகமான நாடகக் குழுக்களால் மிகவும் பரவலாக மேடையேற்றப்பட்டிருக்கும் நாடகம் என்று சொல்லலாம்.

## (பகுதி - அ) வினா வங்கி

1. இன்குலாப்பின் நாடகங்களைக் குறிப்பிடுக
2. இன்குலாப் பெற்ற விருதுகள் யாவை?
3. சங்கப்பாடல்களில் ஔவையால் குறிக்கப்படும் பெண் கவிஞர் யார்? அதியமான் நெடுமான் அஞ்சியின் மகன் யார்?
4. எஸ். ராமகிருஷ்ணனின் சிறுகதைத் தொகுப்புகள் யாவை?
5. எஸ். ராமகிருஷ்ணனின் நாடகத் தொகுப்புகளைக் குறிப்பிடுக.
6. எஸ். ராமகிருஷ்ணனின் புதினங்களைக் குறிப்பிடுக.
7. ஈ.க்கள் என்ற நாடகத்தை எழுதியவர் யார்? கார்செனின் பாத்திரம் இடம்பெறும் நாடகம் எது?
8. ழான் - போல் சார்த்ர் இயற்றிய நாடகங்கள் யாவை?

## (பகுதி - ஆ)

1. ஔவை நாடகத்தில் மருதநிலக் காட்சி எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
2. திருமுடிக்காரியைப் பற்றி வீரர்கள் யாது கூறுகின்றனர்?
3. எயினர்கள் பாணர்களுக்கு உணவிடும் தன்மையை விளக்குக
4. நாஞ்சில் வள்ளுவனின் கொடைத் தன்மையை ஔவை எவ்வாறு பாராட்டுகின்றாள்?
5. எஸ். ராமகிருஷ்ணனின் படைப்புகளைக் குறிப்பிடுக
6. நகரக்குறிப்புகள் நாடகத்தின் கதைச் சுருக்கத்தினை எழுதுக?

7. பொய் விசாரணை நாடகத்தில் எஸ். ராமகிருஷ்ணன் வெளிப்படுத்தும் திறனை விவரிக்க.

8. மீனா குமரயுமா நாடகத்தில் வரும் எஸ்தரின் பாத்திரப் படைப்பினை விளக்குக.

9. கோமையனின் குணநலன்களை ழான் - போல் சார்த்ர் எங்ஙனம் உரைக்கின்றார்?

(பகுதி - இ)

1. ஔவைக்கும் அதியனுக்கும் நடந்த உரையாடலை இன்குலாப் வழி ஆராய்க.

2. ஔவை நாடகத்தில் இன்குலாப் கையாண்ட உத்திகள், புதுமைகளை ஆராய்க

3. பணம் செய்வதற்காக வெளிநாடு செல்பவர்கள் அனைவரும் சிந்துபாத்துகளே - எஸ். ராமகிருஷ்ணன் வழி ஆய்க.

4. சிந்துபாத்துக்கும் அவன் மனைவிக்கும் நடந்த உரையாடலை விவரி.

5. மதமும் அதிகாரமும் எப்படி தனது ஒடுக்குமுறையை செயல்படுத்துகின்றன என்பதை பொய்விசாரணை நாடகம் வழி விளக்குக.

6. சவரக்குறிப்புகள் நாடகம் செயல்படும் பாங்கினை விவரிக்க.

7. 'மீனா குமரயுமா' நாடகத்தினைத் திறனாய்வு செய்க.

8. காரசனின் பாத்திரப்படைப்பினை ழான் போல் சார்த்ர் எங்ஙனம் வெளியிடுகின்றார்?

9. மீனாகுமரயுமா நாடகத்தில் வரும் கதைமாந்தர் பண்பு நலன்களை விளக்குக.

10. 'நரகம் என்பது மற்றவர்கள் தான்' - மீனாகுமரயுமா நாடகம் மூலம் ஆராய்க